thiraimalar.com

# திரைமலர்

.காம்

மாதம் இருமுறை இதழ் ஏப்ரல் 16-30

இதழ்-1 மலர்-1



## கிளாமருக்கு தயாராகும் பார்வதி நாயர்

## ஆண்களிடம் பெண்கள் எதிர்பார்க்கும் 37 விஷயங்கள்

## PORN STAR வாழ்க்கையில் சந்திக்கும் இன்னல்கள்!

# இணையத்தையே முடக்கும் அஞ்சலி கவர்ச்சி படங்கள்

# MASTER

## நான்தான் நடிப்பேன்...

# அடம்பிடித்த பாலிவுட் டாப் ஹீரோ

மாஸ்டர் படம் இந்தியா முழுவதும் ரிலீஸாகியிருந் தாலும் மற்ற மொழிகளில் மாஸ்டர் படத்தை ரீமேக் செய்வதில் பல முன்னணி நடிகர்கள் ஆர்வம் காட்டி வந்தனர்.

விஜய் மற்றும் லோகேஷ் கனகராஜ் கூட்டணியில் வெளியாகி தரமான சம் பவம் செய்த திரைப்படம் தான் மாஸ்டர். மாஸ்டர் படம் ஹிட்டானதை விட வசூலை வாரி குவித்தது தான் பல முன்னணி நடிகர்களும் ஆச்சரியத்தை கொடுத்தது.



இந்திய சினிமாவில் உள்ள பல முன்னணி நடிகர்களும் தங்களுடைய படங்களை தியேட்டரில் ரிலீஸ் செய்யாமல் நேரடியாக ஓடிடி தளங்களில் ரிலீஸ் செய்ய முடிவு செய்துள்ளனர். அதற்குக் காரணம் தங்களுடைய படங்கள் வசூல் செய்யுமா என்ற சந்தேகம் தான்.

ஆனால் விஜய் மட்டுமே தைரியமாக தன்னு டைய படத்தை நேரடியாக தியேட்டரில் ரிலீஸ் செய் தார். இவ்வளவு கூட்டம் வரும் என விஜய்யே எதிர் பார்த்திருக்க மாட்டார். அந்தளவுக்கு மாஸ்டர் படம் நல்ல வசூலை ஈட்டி கொடுத்துள்ளது.

இதனை பார்த்து பல முன்னணி நடிகர்களும் தங்களுடைய படங்களை தியேட்டரில் வெளி யிட்டு வருகின்றனர். இது ஒருபுறமிருக்க விஜய்யின் மாஸ்டர் திரைப்படம் பற்றி முக்கிய செய்தி வெளி வந்துள்ளது. இந்த படத்தின் இந்தி ரீமேக்கிங்கில் நான்தான் நடிப்பேன்என்று சல்மான்கான் விரும்பி கேட் டதாகவும் கூறப்படுகிறது.

இந்தியை தவிர மற்ற அனைத்து மொழிகளிலும் நல்ல வரவேற்பைப் பெற்ற மாஸ்டர் படத்தை தற்போது ஹிந்தியில் ரீமேக் செய்தாக வேண்டும் என அடம்பிடித்து கொண்டிருக்கி றாராம் சல்மான்கான். மேலும் ஹிந்தியில் தென்னிந்திய படங்களை ரீமேக் செய் வதில் வல்லவராக இருக்கும் பிரபுதேவா இந்த படத்தை இயக்கவும் அதிக வாய்ப்புள்ளதாம்.

# நயன்தாரா Bio data



பிறப்பு: நவம்பர் 18, 1984; இயற்பெயர்: டயானா மரியா குரியன், தென்னிந்தியத் திரைப்பட நடிகை ஆவார். நயன்தாரா, கேரளா மாநிலத்தில் பிறப்பிடமாய் கொண்டுள்ள இவர், பிறந்தது கர்நாடகாவில் உள்ள பெங்களூரில்.

பிறப்பால் மலையாள குடும்பத்தை சேர்ந்தவர். இவர் பெங்களூரில் பிறந்திருந் தாலும் இவரது தந்தை இந்திய விமான படையில் பணியாற்றியதால் இவர், இவரின் பள்ளி படிப்பினை ஜாம்நகர், குஜராத், டெல்லி போன்ற மாநிலங்களில் பயின்றுள்ளார். பின்னர் கேரளாவில் உள்ள மார்தோமா கல்லூரியில் தனது இளங்கலை படத்தினை வென்றுள்ளார்.

இவருக்கு லெனோ எனும் தமயன் உள்ளார், இவர் துபாயில் வாழ்ந்து வருகிறார். இவர் கல்லூரி பருவத்தில் மாடலிங் துறையில் அவ்வப்போது பொழுதுபோக்கிற்காக பணியாற்றி வந்துள்ளார்.

இவர் பணியாற்றிய மாடலிங் துறையின் மூலம் இவருக்கு பிரபல மலையாள திரைப்பட இயக்குனர் சத்யன் அந்திக்கப்ன் அறிமுகம்

கிடைத்து "மனஸ்ஸினைக்கற" திரைப் படத்தில் நடித்து திரையுலகில் அறிமுகமாகியுள்ளார்.

2003ம் ஆண்டு மனசினகாரே என்ற மலையாள மொழித்திரைப் படம் மூலம் திரைப் படத்துறைக்கு அறிமுகமானார் நயன்தாரா,

இப்படத்தினை தொடர்ந்து தமிழ் திரையுலகில் இயக்குனர் ஹரி இயக்கத்தில் சரத்குமார் இரட்டைவேடங்களில்நடித்து புகழ் பெற்றஐயாதிரைப்படத்தில் நாயகியாக நடித்து தமிழ் திரையுலகில் அறிமுகமாகி பிரபலமாகியுள்ளார்.

தமிழில் மாபெரும் வெற்றி பெற்றஇத்திரைப்படத்தில்நடித்து தமிழில் சிறந்த அறிமுகநடிகையென பலரால் கௌரவிற்கப்பட்டார்.

இப்படத்தினை தொடர்ந்துஇவர்



2005ம் ஆண்டு மாபெரும் வெற்றி பெற்ற திரைப்படமான சந்திரமுகி திரைப்படத்தில் நடிகர் ரஜினிகாந்திற்கு ஜோடியாக நடித்து தமிழ் திரையில் பிரபலமாகியுள்ளார்.

இப்படத்தினை தொடர்ந்து தமிழ் திரையுலகில் பல முன்னணி நடிகைகளுடன் நடித்து தமிழ், தெலுங்கு, மலையாள திரையுலகில் முன்னணி நடிகையாக புகழ் பெற்றுள்ளார்.

இவர் பெண்களை மையமாகக் கொண்டிருக்கும் கதைகளைத் தேர்ந்தெடுத்து நடித்துக் கொண்டிருக்கி றார், இதனால் இவர் தமிழ் சினிமாவில் 2010களில் தொடங்கி இன்று வரை பெண் சூப்பர் ஸ்டார் என்று கருதப்படுகிறார்.








# காதல் தோல்வி வாய்ப்பை தேடும் அஞ்சலி

தமிழ் மற்றும் தெலுங்கு சினிமாவில் பிரபல நடிகையாக வலம் வரும் அஞ்சலி தன்னுடைய காதல் தோல்வி குறித்து முதல்முறையாக காதலால் ஏற்பட்ட அவஸ்தையும் கூறியுள்ளார். ஆரம்பத்தில் நல்ல கதைகளை தேர்ந்தெடுத்து நடித்து வந்த அஞ்சலி ஒருகட்டத்தில் கமர்ஷியல் நாயகியாக வலம் வர ஆசைப்பட்டு புதைகுழியில் விழுந்தார் என்று தான் சொல்ல வேண்டும்.

கவர்ச்சியில் எல்லை மீற தெலுங்கு சினிமா அள்ளிக்கொண்டு போனது. ஒரு சமயத்தில் அஞ்சலியை கேரியர் உச்சத்திற்கு சென்று கொண்டிருக்கும் போது தன்னுடைய குடும்பத்தினரால் அவருக்கு பிரச்சனை ஏற்பட்டு சினிமாவில் இருந்து கொஞ்சம் விலகி இருந்தார்.

அதன்பிறகு மீண்டுவந்த அஞ்சலி படங்களில் கவனம் செலுத்தினார். இதற்கிடையில் தமிழ் சினிமாவில் உள்ள இளம் நடிகர் ஒருவருடன் நீண்ட காலமாக காதலில் இருந்து வந்தார். காதலில் இருந்தார் என்பதைவிட லிவிங் டுகெதர் முறையில் வாழ்ந்து வந்தனர் என்று பலரும் சொல்லும் அளவுக்கு நடந்து கொண்டனர்.

ஆனால் சமீப காலமாக அந்த நடிகரின் பக்கம் அஞ்சலி தலைவைத்துப் படுப்பதில்லை. அதற்கு காரணம் அந்த நடிகர் அஞ்சலியை கழட்டி விட்டுவிட்டு வேறு ஒரு நடிகையுடன் டாவடித்துக் கொண்டிருக்கிறார் என்ற செய்திதான் சமீபத்தில் இணையத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அஞ்சலி காதல் என்ற பெயரில் ஏமாந்துவிட்டேன் எனவும், அதனால் தன் வாழ்க்கையில் பல சந்தோஷங்களை இழந்து விட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இதிலிருந்து மீண்டு வந்து தற்போது சினிமாவில் கவனம் செலுத்துவதற்கு தனது அம்மாதான் காரணம் எனவும் அஞ்சலி கூறியுள்ளது ரசிகர்களிடம் யார் அந்த நடிகர்? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.






| | |
|---|---|
| 2005 | ஐயா |
| 2005 | சந்திரமுகி |
| 2005 | சிவகாசி |
| 2005 | கஜினி |
| 2006 | கள்வனின் காதலி |
| 2006 | வல்லவன் |
| 2006 | தலைமகன் |
| 2006 | ஈ |
| 2007 | சிவாஜி |
| 2007 | பில்லா |
| 2008 | யாரடி நீ மோகினி |
| 2008 | குசேலன் |
| 2008 | சத்யம் |
| 2008 | ஏகன் |
| 2009 | வில்லு |
| 2009 | ஆதவன் |
| 2010 | பாஸ் என்கிற பாஸ்கரன் |
| 2010 | கோவா |
| 2013 | ராஜா ராணி |
| 2013 | ஆரம்பம் |
| 2013 | எதிர்நீச்சல் |
| 2014 | இது கதிர்வேலன் காதல் |
| 2015 | இது நம்ம ஆளு |
| 2015 | மாசு என்கிற மாசிலாமணி |
| 2015 | தனி ஒருவன் |
| 2015 | நானும் ரௌடி தான் |
| 2015 | நண்பேன்டா |
| 2015 | நைட் ஷோ |
| 2015 | மாயா |
| 2016 | திருநாள் |
| 2016 | இருமுகன் |
| 2016 | காஷ்மோரா |
| 2017 | கொலையுதிர்காலம் |
| 2017 | வேலைக்காரன் |
| 2017 | டோரா |
| 2017 | வாசுகி |
| 2017 | அறம் |
| 2018 | காத்துவாக்குல ரெண்டு காதல் |
| 2018 | கோலமாவு கோகிலா |
| 2018 | இமைக்கா நொடிகள் |
| 2019 | விசுவாசம் |
| 2019 | மிஸ்டர் லோக்கல் |





# வைரலாகும் ஹாட் பிரவீணா

கலர்ஸ் தொலைக்காட்சியில் திருமணம் என்ற சீரியலில் பிரபலமான நடிகராக வலம் வந்த சித்து மற்றும் ஆலியா மானசா நடித்து வருகிறார். இதில் சித்துவுக்கு அம்மா கதாபாத்திரத்தில் நடித்து வருபவர் தான் பிரவீனா.

இவர் அந்தக் காலத்தில் இருந்தே நடிகையாக வலம் வந்து கொண்டிருக்கிறார். ஆனால் முன்னணி நடிகையாக எங்கேயுமே தன்னுடைய முத்திரையை பதிக்க வில்லை. இந்நிலையில் தற்போது முன்னணி ஹீரோக்களுக்கு அம்மாவாக வேடத்திலும், சீரியலிலும் நடித்து கொண்டிருக்கிறார்.

அப்படி பிரவீனா தன்னுடைய இளமைக் கால கட்டங்களில் கொஞ்சம் கிளாமராக நடித்துள்ள வீடியோ ஒன்று தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது. அதிலும் சேலை அணிந்து கொண்டு தன்னுடைய மாராப்பை இறக்கியபடி பேசும் வீடியோ ரசிகர்களை கிச்சுகிச்சு மூட்டியுள்ளது.



சஞ்சீவ் மற்றும் ஆலியா மானசா இருவரும் இணைந்து நடித்த ராஜா ராணி சீரியல் விஜய் டிவியில் மிகவும் பிரபலமாக பேசப்பட்டது. அதிலும் சின்னையா என்று சொல்லிக்கொண்டு ஆலியா ஹீரோவை சுற்றி வருவது பல ரசிகர்களையும் கவர்ந்தது.

இதன் காரணமாக வெற்றி நடை போட்ட அந்த சீரியலில் நடித்த இருவருமே பின்னர் காதலித்து திருமணம் செய்து கொண்டனர். தற்போது அவர்களுக்கு ஒரு பெண் குழந்தையும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து சஞ்சீவ் காற்றின் மொழி என்ற சீரியலில் ஹீரோவாக நடித்து வந்தார். குழந்தை பெறுவதற்காக கேப் எடுத்துக்கொண்ட ஆலியா மானசா தற்போது மீண்டும் ராஜா ராணி 2 என்ற சீரியல் மூலம் ரீஎன்ட்ரி கொடுத்துள்ளார்.



# கிளாமருக்கு தயாராகும் பார்வதி நாயர்

ஜெயம் ரவி நடிப்பில் வெளியான நிமிர்ந்து நில் படத்தின் மூலம் தமிழ் சினிமாவிற்கு அறிமுகமான பார்வதி நாயர். அதன் பிறகு அஜித் நடிப்பில் வெளியான என்னை அறிந்தால் திரைப்படத்தில் அருண் விஜய்யின் மனைவியாக நடித்து அஜித் ரசிகர்களிடம் பிரபலமானார்.

அதன்பிறகு இவர் நடிப்பில் வெளியான கோடிட்ட இடங்களை நிரப்புக மற்றும் எங்கிட்ட மோதாதே, நிமிர், வெள்ள ராஜா, சீதகாதி ஆகிய எந்த படங்களுமே பெரிய அளவில் வெற்றி பெறவில்லை.

தற்போது பார்வதி நாயர் aalambama என்ற படத்தில் மட்டும் நடித்து வெளிவர காத்துகொண்டு இருக்கிறது. பார்வதி நாயருக்கு பட வாய்ப்புகள் குறைய ஆரம்பித்ததால் மற்ற நடிகைகளைப் போல கவர்ச்சியான புகைப்படங்கள் எடுத்து வெளியிட்டு வருகிறார்.

அந்த புகைப்படத்தை பார்த்த ரசிகர்கள் பேபி டால் மற்றும் சூப்பர் குயின், லவ்லி போன்று கமெண்ட் பாக்ஸ் இல் ரொமான்ஸாக பதிவு செய்து வருகின்றனர். மேலும் ஒரு சில ரசிகர்கள் அட நம்ம பார்வதி நாயர் இப்படி கவர்ச்சியில் குதித்துள்ளார் என ஆச்சரியத்தில் உள்ளனர்.

ஆனால் பார்வதி நாயர் இதையெல்லாம் கண்டு கொள்ளாமல் எது எப்படியோ எனக்கு பட வாய்ப்பு வந்தால் சரிப்பா நான் சீக்கிரமா செட்டில் ஆகணும் என சினிமா வட்டாரத்தில் கூறியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# இருவேறு பார்வைகள்!!

## கணவன் மனைவி ஒற்றுமைக்கு



"வீட்டிலே காபி கொடுத்தாள் மனைவி. உள்ளே ஓர் எறும்பு கிடந்தது அதைக் கண்ட கணவன் காபியை விடக் கொதிக்க ஆரம்பித்துவிட்டான் விளைவு? சண்டை. சந்தோசமான வீடு மூன்று நாள் துக்க வீடாக மாறிவிட்டது

இதே சம்பவம் இன்னொரு வீட்டிலும் நடந்தது அந்த வீட்டில் உள்ள கணவன் காபியில் செத்து மிதக்கும் எறும்பை எடுத்தான். அவன் மனைவியை அழைத்து மெதுவாகச் சொன்னான். "உன் காபிக்கு என்னை விடவும் தீவிர ரசிகன் இந்த எறும்புதான். உன் காபிக்காக உயிரையே கொடுத்து விட்டது பார். இது போல் ரசிகர்களை வீணாய் இழந்து விடாதே."மனைவி சிரித்தாள். தன் தவற்றை உணர்ந்தாள். அதன்பிறகு அவர்கள் வீட்டுக் காபியில் எறும்பு சாகவில்லை . அவர்கள் வீட்டின் மகிழ்ச்சியும் சாகவில்லை

குறைகள் என்பது குறைத்து கொள்ள மட்டுமே மனகில் போட்டு குழப்பிக் கொள்ளக் கூடாது.

# மொபைலில் பதிவாகும் டெர்ரர் பெயர்கள்

ஆளாளுக்கு ரெண்டு மூணு மொபைல் நம்பர் வச்சிருக்காங்க... அதை அவங்க ரிலேடிவ்ஸ் பெயரை சேவ் செய்யும் போது எளிதாக புரிந்து கொள்வதற்காக பல பெயர்களில் எண்களை பயன்படுத்தி சேவ் செய்கின்றனர். அவ்வாறு அவர்கள் பதிவு செய்த எண்களை பார்த்தால் மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும்.

இந்த சுவாரஸ்யமான பெயர்களை மொபைலில் எவ்வாறு பதிவு செய்துள்ளனர் என்பதை பார்ப் போம்.

**பார்த்தா.. டெர்ரரா இருக்கு**

"Mummy new"
"Appa 2"
"Wife new"
"Wife 2"
"Mother in Law Jio"

**அதுல இது லேடஸ்ட்....**

Husband temporary

**இதுல ஹைலைட்**

Husband 1
Husband 2
Husband 3





# இணையத்தையே முடக்கும் அஞ்சலி கவர்ச்சி படங்கள்

சினிமா பட வாய்ப்பிற்காக கவர்ச்சி காட்ட தயாராகும் அஞ்சலி, தற்போது இணைய தொடர்களில் நடித்துவருகிறார்.

இணைய தொடரில் அஞ்சலியின் கவர்ச்சி காட்சியில் ரசிகர்கள் மிரண்டு போய் உள்ளனர்.

அஞ்சலியின் சூடான படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன. இன்ஸ்டாகிராம் உள் ளிட்ட சமூக ஊடகங்களின் அதிக அளவில் அஞ்சலியின் ஹாட் படம் அதிகளவில் ஷேர் ஆகிவருகின்றன. அஞ்சலியின் தாராள கவர்ச்சி அதிகம் விரும்பி பார்க்கப்படுவதால் நெட்பிளிக்ஸ் போன்ற தொடர்களில் அஞ்சலி மிகுந்த பிசியாக உள்ளார்.





# கவர்ச்சிக்கு தயாராகும் அஞ்சலி

கற்றது தமிழ் படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானார் அஞ்சலி. முதல் படமே பெயர் சொல்லும் படமாக அமைந்ததால் தொடர்ந்து வாய்ப்புகள் குவிந்தன. அங்காடி தெரு படத்தின் மூலம் இளம் நடிகர்களின் வரவேற்பையும் பெற்றார்.

இதனால் தொடர்ந்து தமிழ், தெலுங்கு, மலையாளம் என அனைத்து மொழிகளிலும் குறிப்பிடத்தக்க நடிகையாக வலம் வந்தார். இடையில் குடும்பத்தாருடன் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக சினிமாவில் இருந்து சில காலம் ஒதுங்கி இருந்தார்.

பின்னர் மீண்டும் தமிழ் சினிமாவில் அறிமுகமாகி தற்போது வரை தொடர்ந்து பல படங்களில் நடித்து வருகிறார். நீண்ட காலமாக சினிமாவில் இருந்தாலும் தற்போது வரை அவரால் முன்னணி நாயகியாக வலம் வர முடியவில்லை.

அதுமட்டுமில்லாமல் பட வாய்ப்புக்காக ஆடையை குறைக்கும் பழக்கம் மொத்த சினிமா உலகிலும் உண்டு. அந்த வகையில் பொது இடத்தில் அநியாயத்திற்கு தொடையை காட்டிக்கொண்டு குழந்தைகள் போடும் உடையை அணிந்து புகைப்படம் எடுத்த அஞ்சலியை நெட்டிசன்கள் கலாய்த்து வருகின்றனர்.



# ஆசை

உன் தோளைத் தொட்டுச் செல்லும்
வண்ணத்துப்பூச்சியாய் இருக்க ஆசை
கண்ணீரை, வியர்வையோ அதை
இதமாக துடைத்து விடும்
உன் கைகுட்டையாய் இருக்க ஆசை
உன் காதோரம் கன்னம் தொடும்
சின்ன கம்மலாய் இருக்க ஆசை
நீ கரம் பிடித்து எழுதிடும்
பேனாவை இருக்க ஆசை...
சத்தமான நேரத்திலும் உன் சாந்தம் பேசிடும்
அந்த மௌனமாய் இருக்க ஆசை
உன் அறை ஜன்னல் வழியே வரும்
தென்றலாய் இருக்க ஆசை
நீ கைநீட்டி பறித்திடும்
ரோஜாவை இருக்க ஆசை
என் காதலை நீ ஏற்காவிட்டாலும்
உன்னை படைத்த பிரம்மனை பார்த்தால்
பூச்செண்டு கொடுக்க ஆசை!

– பொ.இராஜா

# ஹைக்கூ

மனிதனை தேடி கடவுள் வருகிறான்
சாலையோரத்தில் ஓவியமாய்.
முடியும் வரை புரட்டிப் பார்க்கிறது
வாழ்க்கையின் பக்கங்களை மரணம்.
பொம்மை கேட்பதுபோல்
அடம் பிடித்து அழுதது குழந்தை,
அப்பா வேண்டும் என்று..
எப்படிச் சொல்வாள் பதிலை விதவைத் தாய்.
அவசர அவசரமாக சமைத்து முடித்தாள்
வேலைக்காரி, வீட்டில் பசியோடு குழந்தை.

– பொ.சூர்யலதா

# ஆண்களிடம் பெண்கள் எதிர்பார்க்கும் 37 விஷயங்கள்

01. அன்பாக , பிரியமாக இருக்க வேண்டும்.
02. மனது புண்படும்படி பேசக் கூடாது.
03. கோபப்படக்கூடாது.
04. சாப்பாட்டில் குறை சொல்லக் கூடாது
05. பலர் முன் திட்டக்கூடாது.
06. எந்த இடத்திலும் மனைவியை விட்டுக் கொடுக்க கூடாது.
07. முக்கிய விழாக்களுக்கு சேர்ந்து போக வேண்டும்.
08. மனைவியிடம் கலந்து ஆலோசிக்க வேண்டும்.
09. சொல்வதைப் பொறுமையாகக் கேட்க வேண்டும்
10. மனைவியின் கருத்தை ஆதரிக்க வேண்டும், மதிக்க வேண்டும்.
11. வித்தியாசமாக ஏதாவது செய்தால் ரசிக்க வேண்டும் பாராட்ட வேண்டும்.
12. பணம் மட்டும் குறிக்கோள் அல்ல. குழந்தை, குடும்பம் இவற்றிற்கும் உரிய முக்கியத்துவம் தந்து நடந்து கொள்ள வேண்டும்.
13. வாரம் ஒரு முறையாவது. மனம் விட்டுப் பேச வேண்டும்.
14. மாதம் ஒரு முறையாவது வெளியில் அழைத்துச் செல்ல வேண்டும்.
15. ஆண்டுக்கு ஒரு முறையாவது சுற்றுலா செல்ல வேண்டும்.
16. பிள்ளைகளின் படிப்பைப் பற்றி அக்கறையுடன் கேட்க வேண்டும்.
17. ஒளிவு மறைவு கூடாது.
18. மனைவியை நம்ப வேண்டும்.
19. முக்கியமானவற்றை மனைவியிடம் கூற வேண்டும்.








20. மனைவியிடம் அடுத்த பெண்ணைப் பாராட்டக் கூடாது.
21. அடுத்தவர் மனைவி அழகாக இருக்கிறாள் என்று எண்ணாமல் தனக்குக் கிடைத்ததை வைத்து சந்தோசப்பட வேண்டும்.
22. தனக்கு இருக்கும் கஷ்டம் தன் மனைவிக்கும் இருக்கும் என்று எண்ண வேண்டும்.
23. உடல் நலமில்லாத போது உடனிருந்து கவனிக்க வேண்டும்.
24. சின்ன, சின்னத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும்.
25. சிறு சிறு உதவிகள் செய்ய வேண்டும்.
26. குழந்தைகள் அசிங்கம் செய்து விட்டால் "இது உன் குழந்தை" என்று ஒதுங்கக் கூடாது.
27. அம்மாவிடம் காட்டும் பாசத்தை, மனைவியிட மும் காட்ட வேண்டும். ஏனென்றால் மனம் சலிக்காமல் அம்மாவை விட, அக்கா, தங்கையை விட அதிகமாக கவனிக்க கூடியவள் மனைவி.
28. நேரத்திற்குச் சாப்பிட வேண்டும்.
29. சாப்பாடு வேண்டுமென்றால் முன் கூட்டியே சொல்ல வேண்டும்.
30. எங்கு சென்றாலும் மனைவியிடம் சொல்லி விட்டுச் சொல்ல வேண்டும்.
31. சொன்ன நேரத்திற்கு வர வேண்டும்.
32. எப்போதும் வீட்டு நினைப்பு வேண்டும்.
33. மனைவியின் பிறந்த நாள் தெரிய வேண்டும்.
34. மனைவிக்குப் பிடித்தவற்றைத் தெரிந்து வைத் திருக்க வேண்டும்.
35. பொய், சூது, மது, மாது போன்ற தீய பழக்கங்கள் கூடாது.
36. மனைவி வீட்டாரைக் குறை சொல்லக் கூடாது.
37. கைச் செலவுக்கு பணம் தர வேண்டும்.

# ராகி சாக்லேட் லட்டு

**என்னென்ன தேவை?**

டார்க் சாக்லேட் 50 கிராம்

வறுத்து பொடி செய்த ராகி மாவு 100 லிருந்து 150 கிராம்

முந்திரி வறுத்து பொடித்து 20 கிராம்

ஏலக்காய் ஒரு சிட்டிகை

சாரப்பருப்பு 2 டேபிள் ஸ்பூன்

**செய்முறை**

ஒரு பாத்திரத்தில் ராகி மாவு , ஏலக்காய், சாரப்பருப்பு, ஆகியவற்றைச் சேர்த்து நன்றாக கலந்து கொள்ள வேண்டும்.

இப்போது சாக்லேட் ஒரு பாத்திரத்தில் வைத்து அதை சுடு தண்ணீரில் இருக்கும் மற்றொரு பாத்திரத்தில் வைத்து சாக்லேட்டை கரைக்க செய்யவேண்டும் செய்ய வேண்டும். இப்போது அந்த கரைந்த சாக்லேட்டை மாவுடன் சேர்த்து நன்றாக கலந்து கொள்ள வேண்டும் உருண்டைகளாக உருட்டி குழந் தைகளுக்கு பரிமாறலாம்.



# கொள்ளு பணியாரம்



**என்னென்ன தேவை?**

கொள்ளு 1 கப்

புளுங்கல் அரிசி 2 கப்

பச்சரிசி 1/2 கப்

வெந்தயம் 1 டீ ஸ்பூன்

நறுக்கிய பச்சை மிளகாய் 2 டீ ஸ்பூன்

வெள்ளை எள் சிறிது

நறுக்கிய கொத்தமல்லி 1/4 கப்

உப்பு, எண்ணெய் தேவைக்கு.

**எப்படி செய்வது?**

கொள்ளு, புழுங்கலரிசி, பச்சரிசி, வெந்தயம் சேர்த்து 4 மணி நேரம் ஊறவைக்கவும். நன்கு ஊறியதும் கிரைண்டரில் போட்டு நன்கு அரைக்கவும். அரைத்ததும் உப்பு, எள் சேர்த்து பஜ்ஜி மாவு பதத்திற்கு கரைத்துக் கொள்ளவும். தேவையானால் சிறிது புளிக்க வைக்கலாம்.

அதனுடன் பச்சை மிளகாய் கொத்தமல்லி சேர்த்து கலந்து, குழி பணியார சட்டியை சூடாக்கி

நல்லெண்ணெய் விட்டு மாவை ஊற்றி இருபுறமும் வேக வைத்து எடுத்து பரிமாறவும்.

– சந்திரா

# பெண்கள் முன்னேற்றம்

உலகின் படைப்புகளில் மிகவும் நுட்பமான படைப்பு பெண் என்பவளே. தாயாய், தாரமாய், சகோதரியாய், தோழியாய், மகளாய் அத்தனை பரிமாணத்திலும் பெண் என்பவள் அனைவருக்கும் ஒரு எடுத்துக்காட்டாக வாழ வேண்டும் என்பதே உலகின் எதிர்பார்ப்பு. அவளது படைப்பின் முக்கியத்துவம் என்ன என்பதை இன்னும் பலரும் அறியாமல் இருப்பது வியப்பிலும் வியப்பு.

எத்தனை பாரதி வந்தாலும் பெண் நலம் என்பது எட்டாக்கனியாகவே இன்றளவும் உள்ளது. பெண்கள் முன்னேற்றம் என்பது ஏட்டிலும், மேடைப்பேச்சிலும் உள்ளதே அன்றி உண்மையில் நடைமுறையில் இல்லை. பல்கலை படிப்பிலும், பலநாட்டு பயணத்திலும், பல்துறை வேலைவாய்ப்பிலும், ஆணுக்கு நிகரான ஊதியம், நுனிநாக்கு ஆங்கிலத்திலும், நூலிடை காட்டும் ஆடையிலும் இல்லை முன்னேற்றம். உண்மையான பெண்கள் முன்னேற்றம்என்பது உள்ளத்தின் எண்ணத்திலும், அதை செயலாக்கும் வேட்கையிலுமே உள்ளது. ஒவ்வொரு பெண்ணின் மனத்திலும் தனக்கென்ற ஒரு ஆசை, லட்சியம், கனவு என பல தரப்பட்ட பட்டியல் உண்டு. அங்கீகாரம் தேடும் அதிக வாய்ப்புகள் உண்டு. காலச் சூழ்நிலையாலும், அறிவாலும், அனுபவத்தாலும் இன்னும் பல காரணத்தாலோ, எல்லாவற்றையும் மனதில் வைத்து விதி என வீழ்ந்தோர் பலர். அத்தனையும் சுபமாக்குவதே உண்மையான முன்னேற்றம். தடைகள் தாண்டி தரணியில் உன்னை தவறாது நிலை நாட்டு பெண்ணே. உள்ளத்தில் இருப்பது உலகத்தாருக்கு தீங்கிழைக்காது நன்மை தருமெனில் உள்ளதை உள்ளவாறு உரைத்தலே முன்னேற்றத்தின் முதற்படியாகும். எண்ணத்தை செயலாக்கி எட்டாத சிகரம் தொடு.

உன் வளைக்கை என்றும் வலைக்குள் (இணையம்) சிக்கிக் கொள்ள இடம் தராதே. பெண்ணியம் பேசும் பெண்களில் பலர் சிலந்தி வலையில் சிக்கிய பூச்சிகள்தான் இன்றும். புதிய உலகம் படைக்க உன் கை பலருக்கு வழிகாட்டட்டும். உன்னால் பல பேர் உலகாலட்டும்.

ஆடை அலங்காரம் தரும் அங்கீகாரம் வேண்டாம். அகத்தோடு போராடி அகிலமும் பாராட்ட உன்போல் பலரை உண்டாக்கு போதும். பெண்கள் முன்னேற்றம் என்பது பெட்டிக்கடை மிட்டாயல்ல. வேண்டும் போது வாங்கிக்கொள்ள.



# சினிமா துறையில் ஆர்வமுள்ளவரா நீங்கள்... நிருபராக பணியாற்ற விரும்புகிறீர்களா?

**சினிமா, சின்னத்திரை, லைப்ஸ்டைல், லேடீஸ் ஸ்பெஷல் போன்ற பல்துறை அனுபவம் மிக்க நபர்கள் தொடர்பு கொள்ளவும்.**

**9444264610/ 9841807572**


உனக்கு நீயே அளிக்கும் முழுமுதல் அடையாளம் அது. இலக்கிய பெண்களையும், சாதனை பெண்களையும் போற்றி கதை பேசி திரியாமல் உன்னை உலகிற்கு காட்ட உனக்கான சரித்திரம் படைக்க உழைத்திடு நாளும். உற்றாரையும், சுற்றாரையும் தடைகளாக என்னாதே. உன் உள்ளத்தில் தெளிவு இருந்தால் முன்னேற்றம் உன் முன்பு முழங்காலிடும்.

போற்றுவார் போற்றட்டும் தூற்றுவோர்
தூற்றட்டும் நாட்டிற்கும் வீட்டிற்கும்
நலம்பெற உழைத்தால் நம் காலே
சில நேரம் இடர் கொடுக்கும்.
அத்தனையும் தகர்த்தெரிந்தால்
முன்னேற்றம் உனக்கு
முத்தாய்ப்பாய் கிடைக்கும்.

எட்டாத வானம்போல வாய்ப்புகள் தூரமாகலாம். எளிதில் அடைந்திட இயலாத எண்ணமாகலாம். ஆனாலும், தளராதே முன்னேற்றம் என்றும் உன்போல் அயராது உழைப்பவர்க்கே.

பெண்கள் முன்னேற்றம் என்பது கல்வியோ, வசதி வாய்ப்புகளோ, அழகோ சார்ந்தது அன்று. உள்ளத்துணிவும், எண்ணத்தெளிவும், போராடும் குணமும், சாதனை திறனும், பெற்றுத்தரும் வெகுமதி ஆகும். மன உறுதி போதும் மழைகூட மடுவாகும். வெற்றிகள் பெற்று வாழ்வில் முன்னேற வாழ்த்துக்கள் கோடி பெண்ணை.

– முத்தமிழ்வாசகி



# மருத்துவ செலவா?

## கவலை வேண்டாம்! நாங்க இருக்கோம்.

9841807572

வேலு

உயிர்காக்கும்
உன்னத மருத்துவ
சிகிச்சைக்கு

STAR Health Insurance
Personal & Caring
The Health Insurance Specialist

## மருத்துவ காப்பீடு திட்டம் மூலம்

மருத்துவமனை செலவையும், வருமான வரியையும் சேமியுங்கள்.
(Tax Benifit - U/s 80D) சீனியர் சிட்டிசன் ரூ. 30,000/- வரை மற்றவர்கள் ரூ.25,000 வரை வரியை சேமிக்கலாம். (மொத்தம் ரூ. 55,000/-)

- அவசர காலத்தில் மருத்துவ செலவிற்கு என்ன செய்வீர்கள்?
- நண்பர் மற்றும் உறவினரிடத்தில் கடன் வாங்குவீர்களா?
- பிக்செட் டெபாசிட்டை உடைப்பீர்களா?
- சிகிச்சை மற்றும் மருத்துவமனையின் தரத்தை குறைப்பீர்களா?
- ஓர் அதிசயம் நடப்பதற்காக இறைவனிடத்தில் வேண்டுவீர்களா?
- கிரெடிட் கார்டு மூலம் பணம் செலுத்தி கடனாளி ஆகப் போகின்றீர்களா?

இத்தனை கேள்விக்கும் ஒரே தீர்வு!

**முன்னெச்சரிக்கையாக மருத்துவ காப்பீடுகளை எடுத்துக் கொள்ளுங்கள்.**

**ஸ்டார் மருத்துவ காப்பீடு ஈடுகட்டிவிடும்.**

இருதய அறுவை சிகிச்சைக்கு பின் வழங்கப்படும் **கார்டியோ பாலிசி** நம்மிடம் மட்டுமே
**நீரிழிவு நோய் பாதுகாப்பு பாலிசியும்** உண்டு.

**தேவைபடாத நேரத்தில் மருத்துவக் காப்பீடு திட்டத்தில் இணையுங்கள்**
**ஏனெனில் தேவைப்படும் நேரத்தில் வழங்கப்படமாட்டாது.**

## மருத்துவக் காப்பீடு ஒரு செலவு அல்ல
## உங்கள் எதிர்கால கனவுகளை பாதுகாப்பது.

**அனைத்து தரப்பினரும் பாலிசி பெறலாம்**

- ☑ தனிநபர் / குடும்பம்
- ☑ 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள்.
- ☑ சர்க்கரை நோயுள்ளவர்கள்
- ☑ ஆஞ்சியோ / பைபாஸ் சர்ஜரி செய்துள்ளவர்கள்
- ☑ புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்கள்
- ☑ விபத்துக்குக் காப்பீடு.
- ☑ குரூப் ஹெல்த் இன்சூரன்ஸ்
- ☑ பள்ளி மாணவர்களுக்கு விபத்துக் காப்பீடு
- ☑ வெளிநாடு செல்பவர்களுக்கு (Overseas Mediclaim Policy)

# PORN STAR

# வாழ்க்கையில் சந்திக்கும் இன்னல்கள்!

மனித வாழ்க்கையும் நாணயமும் ஒன்று, நாண யத்திற்கு இரண்டு பக்கம் இருப்பது போல தான், மனித வாழ்க்கையிலும் இரண்டு பக்கங்கள் உள் ளன.

நாம் ஒரு நபரின் ஒரு பக்கத்தை மட்டும் பார்த்து அவரது கதாபாத்திரத்தை எடைப் போட்டு விடுகி றோம். மறு பக்கத்தையும் காணும் போது தான் அவர்களது சுய ரூபம் என்ன? உண்மையான குணாதிசயங்கள் என்ன? என்பதை அறிந்துக் கொள்ள முடியும்.

பார்ன் ஸ்டார் என்றாலே, பணத்திற்காக எதை வேண்டுமானாலும் செய்வார்கள் என்ற கண் ணோட்டத்தில் பார்க்கப்படுபவர்கள். செக்ஸிற்கு அடிமையானவர்கள் தான் பார்ன் படங்களில் நடிப்பவர்கள் என்று கருதுகிறோம்.

ஆனால், நாணயத்தை போல இவர்களது இன்னொரு பக்கத்தை பார்த்தால்... இவர்கள் மீதான நம்முடைய பார்வை நிச்சயம் மாறும். இன்பம் பொங்கி வழியும் துறையாக காணப்படும் பார்ன் இண்டஸ்ட்ரியில் உண்மையில் வலி மட்டுமே அவர்களுக்கு மிச்சமாகிறது...

இதோ! தங்கள் துறையில் தாங்கள் கடந்து



வரும் துயரம் குறித்து பெண் பார்ன் ஸ்டார்கள் கூறியிருக்கும் வாக்குமூலங்கள்...

## வலி நிறைந்த வாழ்க்கை

பார்ன் துறையில் வேலை பார்க்கும் பெண்களுக்கு நிறையவே வலி இருக்கிறது. இயக்குனர் தேர்வு செய்யும் தீம் மற்றும் நிலைகளில் உடலுறவுக் கொள்வதால் உடல் ரீதியான நிறைய பிரச்சனைகளை நாங்கள் எதிர் கொள்கிறோம். ஷூட்டிங் துவங்கும் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பிருந்தே நாங்கள் தண்ணீர் டயட்டில் இருக்க வேண்டும்.

அதாவது வேறு பழங்கள், உணவுகள் உட்கொள்ள கூடாது. எங்கள் மேனியை பாதுகாக்க இப்படியான நிபந்தனைகளுக்கு கீழ்பணிந்து செல்ல வேண்டியது கட்டாயம்.



பார்ன் மூவி என்பது பார்ப்பவர்களுக்கு மட் டும் தான் இனிமையானதே தவிர, அதில் வாழ்பவர்களுக்கு அல்ல. நாங்கள் கடந்து செல்லும் பாதை மற்றவர்கள் நினைப்பது போல இனிமையானது இல்லை என்பதை ஊர்ஜிதமாக கூற முடியும்.

## உண்மையான உடலுறவு அல்ல...

நீங்கள் பார்ன் படங்களில் பார்ப்பது உண்மையான உடலுறவு அல்ல. இது ஒரு எண்டர்டெயின்மெண்ட் மீடியம். அதாவது மக்களை மகிழ்விக்க தான் இங்கே உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு பார்ன் ஸ்டார்கள் நடித்துக் கொண்டிருக்கும் போது, இயக்குனர், ஒளிப்பதிவாளர், புகைப்படக் கலைஞர், லைட் மேன் மற்றும் ஷூட்டிங் நபர்கள் என பலர் சூழ்ந்திருப்பார்கள்.

அவர்கள் முன்னிலையில் உடலுறவில் ஈடுபடுவது என்பது மிகவும் கடினமானது. அதில் போலியாக ரியாக்ஷன் வேறு தரவேண்டும். ஒட்டுமொத்த பார்ன் படமும் ஏறத்தாழ பத்து இருபது பேர் முன்னிலையில் தான் எடுக்கப்படுகிறது. இது அசௌகரியமானது எனிலும், இது தான் எங்கள் வேலை.

இதற்காக நாங்கள் எதையும் செய்தாக தான் வேண்டும். தனிமை! எங்களுக்கு உறவுகளோ, நட்புகளோ என பெரிதாக யாரும் இருக்க மாட்டார்கள். பெரும்பாலும் பார்ன் ஸ்டார்களும் வட்டமானது குறுகியதாக தான் இருக்கும். எங்கள் துறை சார்ந்த நண்பர்களை தாண்டி வெளியுலகில் எங்களுக்கு நட்பு பெரிதாக இருக்காது. நாங்களே விரும்பினாலும், எங்களுடன் சேர்ந்து வெளியே வர, பழக யாரும் முன்வர மாட்டார்கள். எங்களை பார்த்தாலே அவர்களுக்கு செக்ஸ் என்ற எண்ணம் தான் முதலில் வரும். இதனால், பெரும்பாலான பார்ன் ஸ்டார்கள் தனிமை மற்றும் பரிதாபகரமான வாழ்க்கை தான் வாழ்ந்து வருகிறார்கள்.

யார் ஒருவருக்கும் தனிமை எனும் நிலை வரக் கூடாது. பால்வினை நோய் அச்சம்! எங்களுக்குள் இருக்கும் பெரிய அச்சமே பால்வினை நோய் தான். ஒவ்வொரு மாதமும் நாங்கள் பால்வினை

நோய் பரிசோதனை செய்துக் கொள்ள வேண்டும்.

ஆனால், பெரும்பாலான பார்ன் ஸ்டார்கள் இந்த பரிசோதனை செய்துக் கொள்வதில்லை. ஒருவருக்கு பால்வினை நோய் தொற்று ஏற்பட்டது அறியவந்தால், அவர்களை உடனே துறையில் இருந்து வெளியேற்றி விடுவார்கள். அதன் பிறகு மருத்துவ செலவு, சிகிச்சைக்கு என எந்த ஒரு இயக்குனரும், தயாரிப்பாளரும் உதவவும் முன் வர மாட்டார்கள்.

பார்ன் துறை பற்றி முழு விபரம் தெரியாமல் உள்ளே வந்து பெரிதும் பாதிப்புக்குள்ளானவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள்.

**சுகாதாரம்!**

இங்கே ஒருவர் திடீரென பெரிய ஸ்டார் ஆகிவிடுவார். அதன் பிறகு அவர்களுக்கு நிறைய ஷூட்டிங் வாய்ப்பு வரும். ஒரே நாளில் இரண்டு மூன்று படங்களில் நடிக்கும் அளவிற்கு பிஸியாக மாறிய நபர்களும் இருக்கிறார்கள்.

இதனால், பல சமயங்களில் யாரும் சுய சுகாதாரத்தை பேணிக் காப்பது இல்லை. இதனால் பெரிதும் பாதிக்கப்படுவது பெண் பார்ன் ஸ்டார்கள் தான்.

நேரம், டேட் கருதி இதை இயக்குனர், தயாரிப்பாளர்களிடம் பெரிய குற்றமாக எடுத்துக் கூற முடியாது. அப்படியே கூறினாலும் அடுத்த முறை இப்படியான அசௌகரியங்கள் நடக்காமல் பார்த்துக் கொள்கிறோம் என்பார்கள்.

மற்றவர் இன்பமடைய நாங்கள் துன்பம் அடைந்து நடித்துக் கொண்டிருக்கிறோம். இதுதான் எங்களின் வலி நிறைந்த துறை.



# காலம் மறந்த அற்புத கலைஞர்





திரைப்பட கலைஞர்களும், தமிழில் சினிமா பேசத் தொடங்கிய காலத்தில் சினிமாவை வளர்த்த அற்புதமான கலைஞர்களை எத்தனை பேருக்குத் தெரியும். தியாகராஜ பாகவர், பி.யூ.சின்னப்பா போன்றவர்களை ஒரு சிலருக்கு தெரிந்திருக்கலாம். அவர் காலத்தில் இருந்த மற்ற கலைஞர்கள் பற்றி யாருக்குத் தெரியும். அப்படி காலம் மறந்த அற்புத கலைஞர்தான் டி.ஆர்.மகாலிங்கம்.

மதுரை மாவட்டம், சோழவந்தானை அடுத்துள்ள தென்கரை என்ற ஊரில் பிறந்த மகாலிங்கம்[2] ஐந்து வயதில் இருந்தே மேடையேறி நாடகங்களில் நடிக்கவும் பாடவும் செய்தார். சோழவந்தான் அருகே இருந்த செல்லூர் சேஷ அய்யங்கார் மிருதங்கமும் பாட்டும் மகாலிங்கத்துக்கு சொல்லிக் கொடுத்தார். அவரது குழுவுடன் மடங்களிலும் கோவில்களிலும் பஜனை பாடும் வாய்ப்பு மகாலிங்கத்துக்கு கிடைத்தது. பிரபல பாடகர் எஸ். சி. கிருஷ்ணன் அவரது நெருங்கிய நண்பர். அந்தக் காலத்தில் ஒலிபெருக்கிகள் அதிகமாக இல்லாததால் பாடகர்கள் மிகவும் சத்தமாகப் பாட வேண்டியிருந்தது. அதனால் அக்காலத்துப் பாடகர்கள் எஸ். ஜி. கிட்டப்பா, மகாலிங்கம், எஸ். சி. கிருஷ்ணன், எம். கே. தியாகராஜ பாகவதர் மற்றும் டி. எம். சௌந்தரராஜன் வரை தங்கள் குரலை அதற்குத் தகுந்தவாறு பக்குவப்படுத்த வேண்டியிருந்தது.

பாய்ஸ் நாடகக் கம்பனியில் எஸ்.ஜி.கிட்டப்பாவின் வாரிசு எனப் புகழடைந்திருந்த மகாலிங்கத்துக்கு 13 ஆவது வயதிலேயே திரைப்படத்தில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

12 ஆவது வயதில் மகாலிங்கம் ஒரு நாடகத்தில் நடித்த போது அவரின் பாட்டில் மெய்சிலிர்த்துப் போன ஏ. வி. மெய்யப்பச் செட்டியார், தனது படத்தில் அவரை அறிமுகப்படுத்தினார். 1937ல் ஏவிஎம் இன் பிரகதி பிக்சர்ஸ் நிறுவனத்தின் நந்தகுமார் என்ற படத்தில் கதாநாயகனாக நடித்தார். எஸ். வி. வெங்கட்ராமன் இசை அமைத்த பாடலைப் பாடியபடியே அறிமுகமானார் மகாலிங்கம்.

கிருஷ்ணரைப் பற்றி தமிழ், இந்தி மற்றும் மராத்தி மொழிகளில் எடுக்கப்பட்ட இப்படம் அதிக வெற்றி பெறவில்லை. ஆனாலும் இப்படத்தின் பாடல்கள் பிரபலமாயின. அதன் பின்னர் பிரகலாதா, சதிமுரளி, வாமன அவதாரம், பரசுராமர் போன்ற படங்களில் பாடி நடித்துப் புகழ் பெற்றார்.

திரைப்படங்களில்



நடித்தாலும் நாடகங்களிலும் தொடர்ந்து நடித்தார். வள்ளி திருமணம், பவளக் கொடி போன்ற நாடகங்கள் இவருக்குப் பெரும் புகழைத் தந்தது.

இரண்டாம் உலகப் போர் காலத்தில் 1945ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட ஸ்ரீ வள்ளி படம் அவருக்கு வெற்றிப் படமாக அமைந்தது. அப்படத்தில் அவர் முருகனாக நடித் திருந்தார். அவர் நடிகராகவும் பாடகராகவும் திரைப் படத்துறையில் நிலையான இடத்தைப் பிடிப்பதற்கு அப்படம் பெரிதும் காரணமாய் இருந்தது. 55 வாரங்கள் இத்திரைப்படம் தொடர்ந்து ஓடி சாத னை படைத்தது.

"செந்தமிழ் தேன் மொழியாள் நிலாவென சிரிக்கும் மலர் கொடியாள்...", "ஆடைகட்டிவந்த நிலவோ..." திருவிளையாடல் படத்தில்வரும் "இசைத் தமிழ் நீ செய்த அருஞ்சாதனை..." பாடல் களை இப்போதும்கேட்டு உருகிவிடு கிறோம். ஆனால் அதை பாடியதும், அந்த பாடலில் நடித்ததும் டி.ஆர்.மகா லிங்கம் என்ற மகா கலைஞன் என்பது பலருக்குத் தெரியாது.

1924ம் ஆண்டு மதுரைசோழ வந்தான் அருகே உள்ள தென்கரை ராமகிருஷ்ணன், லட்சுமி தம்பதி களுக்கு மகனாக பிறந்தவர் மகா லிங்கம். தென்கரை ராமகிருஷ்ண மகா லிங்கம் என்பதன் சுருக்கமே டி.ஆர்.மகாலிங்கம். பள்ளி படிப்பு படிக் காமல் பாடத்தான் பிடித்தது மகா லிங்கத் திற்கு காரணம் அவரது குடும்பமே கனபாடிகள் குடும்பம்தான்.

வாய்ப்பாட்டு கற்றுக் கொண்ட மகாலிங்கம், ராஜரத்தினம் பிள்ளையின் பாய்ஸ் நாடக கம்பெனியில் பாடகராக வேலைக்குச் சேர்ந்தார். சில வேடங்களில் நடிக்கவும் செய்தார். ஒரு முறை நாடகத்தில் மகாலிங்கத்தின் நடிப்பை பார்த்த ஏவிஎம் மெய்யப்ப செட்டியார். "வாப்பா உன்னை சினிமாவில் நடிக்க வைக்கிறேன்" என்று தனது ஸ்டுடியோவுக்கு அழைத்துச் சென்று விட்டார்.

1937ம் ஆண்டு நந்தகுமார் படத்தில் பால்ய வயது கிருஷ்ணராக நடித்தார்.

அந்த படம் ஹிட்டானதும் அதன் பிறகு கிருஷ் ணர் வேடம் என்றால் மகாலிங்கத்தை தேட ஆரம் பித்தார்கள். பக்தபிரகலாதன், பரசுராமன் உள்பட பல படங்களில் கிருஷ்ணனாகவே நடித்தார். முருகனாக நடித்த ஸ்ரீவள்ளிதான் டி.ஆர்.மகா லிங்கத்தின் புகழுக்கு மகுடம் சூட்டியது. 52 வாரங்கள் ஓடி அந்தப் படம் சாதனை படைத்தது. தியாகராஜ பாகவதருக்கு பிறகு பாடி நடிக்கும் நடிகர்களில் முதன்மையாக திகழ்ந்தது டி.ஆர்.மகா லிங்கம் தான்.




நடிப்பில் தியாகராஜ பாகவதரின் மறு உருவமாகவும், பாடலில் பி.யூ.சின்னப்பாவின் வாரி சாகவும் சினிமாவில் வலம் வந்தார்.

புகழின் உச்சியில் இருக்கும்போது தன் இஷ்டப்படி படம் எடுக்க தயாரிப்பாளர்கள் அமையாததால் தானே சொந்தப் படம் எடுக்க ஆரம்பித்தார். மோகசுந்தரம், சின்னதுரை, மச்சரேகை, தெருப்பாடகன், விளையாட்டு பொம்மை போன்ற படங்களை தயாரித்தார். அத்தனையும் தோல்வி அடையவே நடித்து சம்பாதித்த அத்தனை செல்வத்தையும் இழந்தார். பிறகு சினிமா மீது வெறுப்பு கொண்டு மீண்டும் நாடகத்திற்கே திரும்பினார். திரைப்படங்களுக்கு நிகராக நாடகங்கள் நடத்தி அனைவரையும் அதிசயிக்க வைத்தார்.

கவியரசர் கண்ணாதாசன் தனது மாலையிட்ட மங்கை படத்தில் டி.ஆர்.மகாலிங்கத்தை மீண்டும் ஹீரோவாக நடிக்க வைத்தார். அந்தப் படம் மாபெரும் பெற்றிபெற மீண்டும் சினிமாவில் வெற்றிகரகமாக வலம்வரத் தொடங்கினார். திருவிளையாடல் உள்ளிட்ட பல புராண படங்களில் மீண்டும் நடித்தார். புகழின் உச்சியில் இருக்கும்போதே சினிமாவை விட்டு விலகி மீண்டும் மேடைதோறும் பாடி மக்களை மகிழ்வித்தார். கடைசி வரை மக்களை தன் இனிய குரலால் தாலாட்டிய டி.ஆர். மகாலிங்கம் 1978ம் ஆண்டு ஏப்ரல் 21ம் நாள் நிரந்தரமாக தூங்கிவிட்டார். சினிமாவை துச்சமென மதித்து நாடகத்தை உயிராக நினைத்து வாழ்ந்த உத்தம கலைஞன் அவர்.

# 10 ரூபாய்க்கு கேர்ள் பிரெண்ட்



சிங்கிள் தான் கெத்து மாமா... என்று ஃபேஸ்புக்கில் கூவினாலும்.. வாட்ஸ்அப்பில் பேச ஒரு லவ்வர் இல் லையே என்று வருந்தும் சிங்கிள் நம்ம ஊரில் மட்டுமல்ல, உலகெங்கிலும் அதிகமான எண்ணிக்கையில் உள்ளனர்.

அதிலும், நண்பர்கள் யாரேனும் பெண்களோடு செல்ஃபீ எடுத்துப் போட்டுவிட்டால்... வருமே பாருங்கள் வயிற்றில் ஒரு எரிச்சல்... அட இவ னுக்கு எங்கயோ மச்சம் டா... வாழு றான் என பெருந்தன்மையாக பொ ரிந்து தள்ளிவிடும் நண்பர்கள் ஏரா ளம்.

இவனுக்கு மட்டும் எப்படி டா அமையுது என்று காண்டாகும் நண்பர்கள் ஏராளமாக உள்ளனர்.

நண்பர்களிலும் இரண்டு வகையினர் உள்ளனர். நாம பிரெண்ட்ஸ் கூட ஷாப்பிங் மால் போனா அதிகபட்சம் ஒன்னு, ரெண்டு மணி நேரம் தான் இருப்போம், அவ்வளோ தான் இருக்க முடியும்.

இதே லவ்வர் கூட போறவங்க... நாள் முழுக்க அங்கேயே தான் இருப்பாங்க. அதுலயும் இந்த ஹாட் சம்மர்ல சொல்லவே வேண்டாம். ஏசி காத்துக்காகவே அங்கேயே குடியிருப்பாங்க.

சும்மா ஊர்





சுத்துறதுக்கு மட்டுமில்ல பல சமயங்கள்ல நாம சரியான முடிவு எடுக்க ஒரு பெண்ணோட துணை வேணும். அவங்க நம்மளவிட கொஞ்சம் முதிர்ச்சியா யோசிச்சு முடிவு எடுப்பாங்க. சரி! என்னவோங்க... எனக்கு ஒரு கேர்ள் பிரெண்ட் வேணும் அவ்வளோ தான் என்று கூறுபவர்களும் உண்டு.

சிங்கிளா இனி மேலும் என்னால ஒத்தையில நிக்க முடியாது. நான் ஒன்னும் வேங்கை மவன் இல்லன்னு வருத்தப்படுற வாலிபர்களுக்கு ஒரு இன்ப செய்தி.

வெறும் ரூ.10க்கு கேர்ள் பிரெண்ட் அதுவும் உங்க சாய்ஸ்ல.... குஷியா இருக்கா... சரி வாங்க எங்க? எப்படி?ன்னு கொஞ்சம் விபரமா பார்க்கலாம்....

தென் சீனாவின் குவாங்டோங் மாகணத்தில் இருக்கும் ஹெயுவான் நகரில் இருக்கிறது வைட்டலிட்டி சிட்டி ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்.

இங்கே தங்கள் நுழைவாயில் பகுதியிலேயே அழகழகான பெண்களை வரிசைக்கட்டி ஒரு மேடையில் நிற்க வைத்துள்ளனர்.

இந்த ஷாப்பிங் மாலுக்கு வரும் ஆண்கள் ஒரு ஆர்.எம்.பி எனப்படும் சீன பணத்தை கொடுத்து (இந்திய மதிப்பில் பத்து ரூபாய்) 20 நிமிடங்களுக்கு அந்த பெண்ணை தங்கள் காதலி ஆக்கிக் கொள்ளலாம்.

எந்த பெண் வேண்டும் என்பதை அந்த ஆண்மகனே தேர்வு செய்துக் கொள்ளலாம். டெக்னாலஜி! இங்கே சும்மா பத்து ரூபாய் கொடுத்து ஒரு பெண்ணை



எங்கேனும் அதிக நேரம் கூட்டி செல்லலாம் என்றெல்லாம் தப்புக் கணக்கு போட்டுடாதிங்க. அவங்க ரொம்ப உஷாரா இருக்காங்க.

ஆமா! ஒவ்வொரு பொண்ணு கையிலயும் ஒரு மொபைல் இருக்கும். அதுல ஒரு கியு.ஆர். கோட் இருக்கும். பத்து ரூபாய் கொடுத்து அந்த பெண்ணின் மொபைலில் இருக்கும் கோடினை ஸ்கேன் செய்துக் கொள்ள வேண்டும்.

நேரம்! கியு.ஆர். ஸ்கேன் செய்த பிறகு உங்களுடன் எத்தனை நேரத்திற்கு காதலியாக இருக்க வேண்டும் என்பது பதிவாகிவிடும். அதற்கு மேல் ஒரு நொடி கூட அந்த பெண் உங்களுடன் காதலியாக இருக்க மாட்டார்.

இங்கே ஒரு நிபந்தனை என்னவெனில், நீங்கள் எத்தனை பணம் வேண்டுமானாலும் கட்டி அந்த பெண்ணை எத்தனை நேரம் வேண்டுமானாலும் காதலியாக ஆக்கிக் கொள்ள இயலும். ஆனால், முழுக்க, முழுக்க அந்த ஷாப்பிங் மாலில் மட்டுமே இருக்க வேண்டும். வெளியே எங்கேயும் செல்ல இயலாது.

நோ டச், டச்... இங்கே ஒரு பெண்ணை தனது காதலியாக்கி கொள்ள, அதாவது வாடகைக்கு காதலி ஆக்கிக் கொள்ள நீங்கள் பணம் செலுத்துவது அந்த ஷாப்பின் மாலில் உள்ள குறிப்பிட்ட இடங்களில் சுற்றிப் பார்க்க மட்டுமே. அது தவிர நீங்கள் ஆசைப்பட்டால் செல்ஃபி எடுத்துக் கொள்ளலாமே தவிர, அவரை தொடுவது முத்தமிடுவது எல்லாம் நோ சான்ஸ் என்கிறது



வைட்டலிட்டி சிட்டி காம்ப்ளக்ஸ் நிர்வாகம்.

நம்ம ஊர்ல எல்லாம் இப்படி ஒரு சான்ஸ் கிடைச்சா.. கூட நின்னு நூறு செல்ஃபீ எடுத்துக்க மட்டுமே நம்ம பயலுக பல நூற ஆயிரம் செலவு பண்ணுவாங்க. நம்ம ஊர் மட்டுமில்ல, எந்த ஊரா இருந்தாலும் இப்படி ஒரு வாய்ப்பு கிடைச்சா விடுவாங்களா பின்ன?

உலகுக்கே பீதிகிளப்பும் கொரனாவையே அசால்டா அறிமுகப்படுத்தினவனுங்களுக்கு இதுபோன்ற ஐடியாக்கள் எங்கிருந்துதான் வருதுன்னே தெரியல!




அழகிய வடிவமைப்பில்

வார இதழ்கள், மாத இதழ்கள், புக் ஓர்க், அட்டைப்பட வடிவமைப்பு, போன்றவை தரமாகவும் குறைந்த செலவில் செய்துதரப்படும்

Bhaanrajg Graphics செல்: +91-9444228203



# மனம் கவரும் ஆகாசவாணி!

செய்திகள் வாசிப்பது சரோஜ் நாராயணசுவாமி "இதைப் படிக்கும் போது மனம் காலை ஏழேகால் மணி பரபரப்பை உணர்ந்தது. அந்த நேர ஸ்கூல், கல்லூரிக்கு செல்லும் பரபரப்பு, அடுக்களை யிலிருந்து மிதந்து வரும் சாம்பார் கொதிக்கும் மணம் எல்லாமே நினைவுக்கு வந்தன..

'ரேடியோ' பொழுது போக்கு அம்சத்தை நம் வீட்டு கூடத்திற்கு கொண்டு வந்தது. இன்று தொழில் நுட்பம் எத்தனையோ சாதனங்களை நம் கையருகில் கொண்டு வந்திருக்கலாம். அதற் கெல்லாம் முன்னோடி 'ரேடியோ.'

கடிகாரம் பார்க்க வேண்டிய அவசியம் இல்லாமல் காதால் நிகழ்ச்சியைக் கேட்டே நேரம் தவறாமல் காரியங்களை நடத்திக் கொண்டிருந்தோம்.

"ஆகாஷவாணி", "ஆல் இன்டியா ரேடியோ" ஆனது.

நேயர் விருப்பம் இன்றும் எனக்கு விருப்பமே! என்னைப் போல் நிறைய பேர் உண்டென்றே நினைக்கிறேன்.

மெட்ராஸ் A, மெட்ராஸ் B, திருச்சி என்று பல ஸ்டேஷன்களை மாற்றி மாற்றி கேட்டிருக்கிறேன்.

ரேடியோ சிலோன் ல் வரும் பிறந்த நாள் வாழ்த்து நிகழ்ச்சி பலரும் விரும்பிக் கேட்கும் ஒன்று ஆகும்.

"வாழ்த்துகிறவர்கள் அம்மம்மா, அப்பப்பா, மாமி, மாமா...." என்று நீண்டு கொண்டே போகும் லிஸ்ட்டையே ரசிப்பவர்கள் நிறைய பேர்.

வீட்டில் ரேடியோ வாங்கிய அன்று எப்படி ஒரு சந்தோஷத்தில் மிதந்தோம். அப்படியே நினைவில் இருக்கிறது.

திருச்சி ஸ்டேஷனும் ரேடியோ சிலோனும் கேட்ப தற்காக ஒரு பெரிய ஏரியல் ஹாலில் நீளமாகக் கட்டியும், ரேடியோ சிலோனில் TMSம், சுசீலாவும் தொண்டைக் கட்டு வந்தது போல் தான் பாடிக் கொண்டிருந்தார்கள்.




விவித்பாரதி , நாம் வணிகமயமாகப் போவதை முன்கூட்டியே நம் வீட்டிற்குள் வந்து அறிவித்தது. அதில் வரும் தேன்கிண்ணம் நிகழ்ச்சிக்கு அப்போ தெல்லாம் பெரும் ரசிகர் பட்டாளம் உண்டு.

சினிமாப் பாட்டுக்கு மட்டுமல்ல, அதில் வந்த விளம்பரங்களுக்கு கூடத்தான் ரசிகர்கள்.சாரிடான், அர்ச்சனா ஸ்வீட்ஸ், நரசுஸ் காபி விளம்பரம்., இதுபோல் நிறைய.... மனதைக் கொள்ளையடிக்கும்.

சினிமா பாட்டு மட்டுமல்ல, கர்நாடக சங்கீதமும், இசைவிழா, நாடக விழா எல்லாமே காதிற்கு விருந்து தான்.

கிரிக்கெட் மேட்ச் கமெண்டரி மறக்க முடியுமா.? கிரிக்கெட் க்ரௌண்டை கண்ணால் பார்க்காமலே mid on , midoff, covers எல்லாமே கற்பனையில்.......... நாம் நினைக்கின்ற இடம் தான் . .Pataudi catch பிடித்தது அப்படியே மனக் கண்ணில் விரிய வைக்கும் , கமெண்டேடர் சாமர்த்தியம்.

அதன் படி மழையெல்லாம் வருமா?

உஷ்.......... அதெல்லாம் கேட்கக் கூடாது.

அதற்குப் பிறகு transistor வந்தது. பார்ப்பதற்கும் ரேடியோவின் சிஸ்டர் தான். டேப் ரெகார்டர் வந்தும் ரேடியோவின் மவுசு குறையத்தானில்லை.

தற்போது FM களின் ஆட்சி . கைபேசியிலேயே கேட்டுவிடலாம். ஆகவே இப்பொழுது ரேடியோ அவசியமில்லை என்ற நிலைக்கு வந்துவிட்டோம்.

சட்டென்று ஒரு குரல் "இன்றைய தலைப்புச் செய்திகள்."

ஓ! நான் இப்பொழுது "டிவி" முன்னால், கையிலோ " ஐபேட் " டிவியும் , இணையமும் , சேர்ந்து ரேடியோ ரசிகர்களை கடத்திக் கொண்டு போய் விட்டது என்று நினைத்தால்......

இல்லை , என்கிறது புள்ளிவிவரம்*.உலகளவில் 1,00,000 ற்கு மேல் ரேடியோ ஸ்டேஷன்களும் , 2,00,000 கோடி ரேடியோக்களும், அதற்கான ரசிகர்களும் உள்ளார்களாம்.

நம்மை மகிழ்விக்கும், ரேடியோவைக் கண்டுபிடித்துக் கொடுத்த 'மார்கோனி 'க்கு

– கோவை மதன்





# பட வாய்ப்புக்கு காத்திருக்கும்

# கீர்த்தி பாண்டியன்

பிரபல நடிகர் அருண் பாண்டியன் 1990 களில் கோலிவுட்டில் முன்னணி முகங்களில் ஒருவராக இருந்தார், மேலும் திறமையான நடிகர் பல சூப்பர் ஹிட் படங்களை வழங்கி யுள்ளார்.

பெரிய திரைகளில் இருந்து விலகி இருந்த அருண் பாண்டியன், சூப்பர் ஹிட் மலையாள படமான 'ஹெலன்' படத்தின் தமிழ் ரீமேக் மூலம் மீண்டும் 'அன்பிற் கினி யால்' படத்திற்காக மீண்டும் திரையில் வந் துள்ளார்,





இப்படத்தை கோகுல் இயக்கியுள்ள 'அன்பிற் கினியால்'படத்தில் அருண் பாண்டியன், கீர்த்தி பாண்டியன், பிரவீன், ரவீந்திரா, பூபதி மற்றும் பலர் இடம்பெற்றுள்ளனர். ஜாவேத் ரியாஸ் இசையமைத்துள்ளார், இப்படத்தை அருண் பாண்டியனின் ஏ அண்ட் பி குழுக்கள் தயாரிக் கின்றன.

தனது மகள் கீர்த்தி பாண்டியனை 'அன்பிற்கினியால்' படத்தில் மூலம் அறிமுகப் படுத்தியுள்ளார்.

கீர்த்தி பாண்டியன் முறையாக நாடகப் பள்ளியில் பயிற்சி பெற்று தற்போது தமிழ சினிமா உலகில் ஹீரோயின் பாத்திரத்திற்கு காலடி எடுத்து வைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார். இவர் சமீபத்தில் வெளியிட்ட புகைப் படங்கள் மூலம் அடுத்த படத்திற்கான வாய்ப்பிற்காக காத்திருக்கிறார். க்யூட்டான நடிகையை தமிழ் சினிமாவில் பார்க்கலாம்.





# கட்டழகு காட்ட ரெடி

பொதுவாக நடிகைகள் என்றாலே அதிகபட்ச மாக தொடர்ந்து 10 வருடங்கள் மட்டுமே முன் னணி நடிகையாக ஜொலிக்க முடியும். ஆனால் மற்ற நடிகைகளை விடவும் 15 வருடங்கள் முன்னணி நடிகையாக சினிமாவில் கலக்கி வந்தவர் நடிகை திரிஷா.

இவர் தென்னிந்திய முன்னணி நடிகைகளில் ஒருவராக வலம் வந்து கொண்டிருக்கிறார். பொது வாக நடிகைகளின் அழகு குறைய தொடங்கி விட்டால் படங்களின் வாய்ப்பும் குறைந்து விடும்.

அந்தவகையில் த்ரிஷாவிற்கு 40க்கும் மேல் வயது ஆகிவிட்டதால் தற்பொழுது திரைப் படங்களில் வாய்ப்பு கிடைக்காமல் தள்ளாடி வருகிறார். பொதுவாக நடிகைகள் அவர்களின் மார்க்கெட்டிங் குறைய தொடங்கி விட்டால் செட்டிலான தொழிலதிபர்களை காதலித்து திருமணம் செய்து கொள்வார்கள்.

ஆனால் திரிஷா அப்படியெல்லாம் செய் யாமல் இன்றளவும் சிங்கிளாக தான் வாழ்ந்துவருகிறார். இவரின் மீது பல காதல் சர்ச்சைகள் எழுந்து இருந்தாலும் தற்பொழுது இரண்டு, மூன்று நபரை காதலித்து தோல்வி அடைந்ததால் திருமணத்தில் நாட்டமில்லாமல் போகி விட்டது.

இந்நிலையில் த்ரிஷா எப்படியாவது திரைப்படங் களின் வாய்ப்பை பெற்றுவிட வேண்டும் என்ற எண்ணத்தில் திரைப்படங்களில் கூட காட்டாத அளவிற்கு கவர்ச்சியான புகைப் படங்கள், வீடியோக்கள் என்று பலவற்றை சோசியல் மீடியாவில் பகிர்ந்து வருகிறார்.

திரிஷா சில வருடங்களுக்குப் பிறகு 96 திரைப்படத்தின் மூலம் கதாநாயகியாக ரீ என்ட்ரி என்று கொடுத்தார். இதன்மூலம் இளசு களின் மத்தியில் இவருக்கு நல்ல வரவேற்பு கிடைத் திருந்தது. இந்நிலையில் திரிஷா தனது முழு தொடை யும் தெரியும் அளவிற்கு கவர்ச்சியான புகைப்படத்தை வெளியிட்டுள்ளார். இந்த புகைப் படத்தை பார்த்த ரசிகர்கள் ப்பா.. பாத்து கிட்டே இருக்கலாம் போல இருக்கே... என்று கமெண்ட் செய்து வருகிறார்கள்.

**Owned, Published by N.Geetharani. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : N.Geetharani, Cell: 9444264610.**
Website: www.thiraimalar.com / E-mail: thiraimalar@yahoo.com

# சினி துறையில் சாதனை செய்ய விரும்புகிறீர்களா?

உங்களைப்பற்றிய விவரங்களை
எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்
உங்கள் ஆர்வத்தையும் திறமையும்
திரைமலர்.காம் இணையதளம் மற்றும்
இ-புக் வாயிலாக வெளியிடுகிறோம்.
சினிமாவில் நீங்கள் விரும்பும்
துறையைப் பற்றி விரிவாக
எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்...

**9444264610**

**9841807572**

